## காயல்பட்டணம் நகராட்சி நகர்மன்றத்தின் 11.12.2020ம் தேதிய அவசரக்கூட்டம்

**மன்றப்பொருள் எண். 1**

காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020-21-ன் கீழ் ரூ.110.00இலட்சம் மதிப்பீட்டில் சாலைப்பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு மன்ற தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் கடித நக.எண். 20557/2020/இ3 நாள்.11.12.2020ஆம் தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.இதில் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது

| **நகராட்சியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை (ரூ கோடியில்)** | **சிறப்பு சாலைகள் திட்ட நிதி (ரூ.கோடியில்)** | **நகராட்சி பங்களிப்பு (ரூ.கோடியில்)** |
|---|---|---|---|
| காயல்பட்டணம் | 1.10 | 0.99 | 0.11 |

மேற்படி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், கீழ்க்காணும் பணிகளை மேற்படி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளவும், இந்த பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ.எண்.** | **வேலையின் பெயர்** | **சாலையின் நீளம் (கி.மீ)** | **சாலையின் அகலம் (மீ)** | **மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்)** |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட அலியார் தெரு சாலை, சித்தன் தெரு முதல் நயினார் தெரு சாலை, காட்டுத்தைக்காத்தெரு சாலை மற்றும் கடையக்குடி மனுவேல் விளை சாலை ஆகிய சாலைகளில் தார்ச்சாலைகள் அமைத்தல் | 2.085 | 4.00 | 110.00 |

**அலுவலக குறிப்பு:**
மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண். 1283/2020/இ1

**தீர்மான எண்–2078 அனுமதிக்கப்பட்டது.**

## டிசம்பர் மாத சாதாரணகூட்ட மன்றப்பொருள் 2020

<u>மன்றப்பொருள். 1</u>

காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்தரவின்படி வீடு வீடாக சென்று அபேட் மருந்து தெளிப்பதற்கும் மற்றும் டெங்கு தடுப்பு நடவடிக்கையினை 40 தற்காலிக பணியாளர்களைக் கொண்டு, ஒப்பந்த அடிப்படையில் செய்திடவும், அதற்கான ஒப்பந்த புள்ளி கோரப்பட்டு அதன் நடைமுறைகள் முடிவுற்று பணிகள் தொடங்கப்படும் வரை உள்ள காலத்திற்கு, ஏற்கனவே இந்நகராட்சியில் திடக்கழிவு மேலான்மையில், உள்ள தனியார் துப்புரவு பணிகளை மேற்கொண்டு வருகின்ற மெஸ்ஸர்ஸ்.கே.ஆர்.கன்ஸ்ட்ரக்ஷன், நிறுவனம் மூலம் செய்திட இந்நகர் மன்ற தீர்மான எண். **2059/2020 (செப்டம்பர் மாத மன்ற பொருள்)** ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போழுது ஒப்பந்த பணிகளுக்கு மேலும் கால அவகாசம் தேவைப்படுவதால், வருகின்ற 3 மாதங்களுக்கு (ஜனவரி, பிப்ரவரி, மார்ச்), தற்போதைய நடவடிக்கைகளையும் மற்றும் அதற்கான செலவினங்களை பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மேற்கொண்டு தொடர அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>– அனுமதி வழங்கலாம்.
<u>ந.க.எண்.720/2014/அ1</u>

**தீர்மான எண்–2079, அனுமதிக்கப்பட்டது**

<u>மன்றப் பொருள்.2</u>

காயல்பட்டணம் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டில் உள்ள TN 92 A 6369 என்ற வாகனத்தில் பராமரிப்பு பணிகள் செய்து வழங்கிடுமாறு இந்த வாகன ஓட்டுநர்(பொ) அறிக்கை வழங்கியுள்ளார். எனவே அதனை அவசர அவசியம் கருதி, பெறப்பட்ட 3 விலைப்புள்ளிகளில், குறைந்த விலைப்புள்ளி வழங்கிய, நியூஸ்டா அட்டோமொபைல்ஸ், திருநெல்வேலி என்ற நிறுவனத்திற்கு பராமரிப்பு பணி செய்ய வேலை உத்தரவு வழங்கிடவும், அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.32,000/-னை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு –</u>
அனுமதி வழங்கலாம்.
ந.க.எண். அ.4 /81 / 2017

**தீர்மான எண்–2080, அனுமதிக்கப்பட்டது**.

<u>மன்றப்பொருள்.3</u>

காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட இடங்களில் முடிதிருத்தகம் / அழகு நிலையம் / ஸ்பா / மசாஜ் நிலையம் நடத்துவோர் இந்நகராட்சியில் விண்ணப்பம் செய்து ஆணையரிடமிருந்து உரிமம் பெற்றுக்கொள்ள, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண்.19775/ ஜே2/2019–3 நாள் 15.12.2020ல் தெரிவிக்கப்பட்டதன் படி, அதற்கான அறிவிப்பினை தினசரி நாளிதழில் விளம்பர அறிவிப்பு செய்திடவும் மற்றும் இது தொடர்பாக மேல் நடவடிக்கை மேற்கொள்ளவும் அதனால் ஏற்படுகின்ற செலவினங்களை பொது நிதியில் செய்திட வேண்டி மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு –
அனுமதிக்கலாம்.
ந.க.எண். 1497/2020/எச்.1

**தீர்மான எண்–2081, அனுமதிக்கப்பட்டது**

மன்றப்பொருள்.4

காயல்பட்டணம் நகராட்சியில் கோவிட்–19 தடுப்பிற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. அதன்பொருட்டு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது தொடர்பாகஆட்டோ மூலம் விளம்பரம் செய்த வகைக்கு நாள் ஒன்றுக்கு (பெட்ரோல், மண்ணெண்ணை, மைக் செட், வண்டி வாடகை உட்பட) தொகை ரூ.2550/– வீதம் 13 நாட்களுக்கு ரூ.33,550/–ம், இதே போன்று கோவிட்–19 தற்காப்பு நடவக்கையாக கபசுர குடிநீர் முகாம் தோறும் வழங்கிய வகைக்கு (பாத்திரம், டீ கேன் வாடகை) நாள் ஒன்றுக்கு 400/– வீதம் 108 நாட்களுக்கு பட்டியல்படி மொத்தம் ரூ.43,200/–ம், அவசர அவசியம் கருதி ஆகிய சில்லறை செலவினங்களை, பொது நிதியில் இருந்து செலவு செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதிக்கலாம்.
ந.க.எண். 369/2020/எச்.1

## தீர்மான எண்–2082, அனுமதிக்கப்பட்டது

மன்ற பொருள்.5

காயல்பட்டணம் நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள பொது சுகாதார வாகனங்களின் அவசர அவசியம் கருதி பழுது பார்த்த வகைக்கு (இணைப்பில் உள்ள பட்டியல் படி) கீழ்க்கண்ட விவரப்படி இந்நகராட்சி ஓட்டுநர் திரு. வெ.ராதாகிருஷ்ணன் அறிக்கை மற்றும் சுகாதார ஆய்வாளர் பரிந்துரை படி, சில்லறை செலவுகள் மேற்கொண்ட வகைக்கு பொது நிதியில் இருந்து, ஓட்டுநர் திரு. வெ.ராதாகிருஷ்ணன் பெயருக்கு தொகை வழங்க மன்ற அனுமதிக்கு,

| வ.எண் | வாகனங்களின் எண். | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | TN 69 D0054 பொது சுகாதார வாகனம் | 310/– |
| 2 | TN 69 S 0146 பொது சுகாதார வாகனம் | 125/– |
| 3 | TN 69 AY 0603 பொது சுகாதார வாகனம் | 3625/– |
| 4 | TN 92 C 6881 அலுவலக வாகனம் | 560/– |
| 5 | TN 92 D 0019 | 270/– |
| 6 | TN 92 U 6922 | 125/– |
| | மொத்தம் | 5010/– |

அலுவலக குறிப்பு–
மன்றம் அனுமதி வழங்கலாம்.
கோப்பு எண். 956/2019/அ4

## தீர்மான எண்–2083, அனுமதிக்கப்பட்டது

**<u>மன்றப் பொருள்.6</u>**

காயல்பட்டணம் நகராட்சியில் ஈப்பு வாகனம் எண். TN 69 U 9148 ல் பயன்பாட்டில் உள்ளது. நகர்ப்பகுதியில் குடிநீர் பணிகளை கவனித்திடும் பொருட்டும், நகராட்சி பகுதியில் இருந்து 35 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தலைமை நீரேற்று நிலையம் சென்று குடிநீர் பணிகளை பார்வையிட வேண்டியதிருப்பதாலும், குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை சரி செய்திடவும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.93660/- னை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு-</u>
அனுமதி வழங்கலாம்.
கோப்பு எண். அ.4/344 / 2011

**தீர்மான எண்–2084, அனுமதிக்கப்பட்டது**

**<u>மன்றப் பொருள்.7</u>**

காயல்பட்டணம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள TN 92 D 0019 எண். கொண்ட வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்ய வேண்டியுள்ளதாக, அந்த வாகன ஓட்டுநர் அறிக்கை வழங்கியுள்ளார். எனவே அவசர அவசியம் கருதி இதனை உடனடியாக சரி செய்ய ஆணையர் முன் அனுமதி பெற்று அய்யனார் ஆட்டோ ஒர்க்ஸ், தூத்துக்குடி, என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியதற்கும், அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.37996/- னை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு-</u>
அனுமதி வழங்கலாம்.
கோப்பு எண். அ4/0187/ 2020

**தீர்மான எண்–2085, அனுமதிக்கப்பட்டது**

**<u>மன்றப் பொருள்.8</u>**

காயல்பட்டணம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள TN 92 D 0052 எண் கொண்ட வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்ய வேண்டியுள்ளதாக, அந்த வாகன ஓட்டுநர் அறிக்கை வழங்கியுள்ளார். எனவே அவசர அவசியம் கருதி இதனை உடனடியாக சரி செய்ய ஆணையர் முன் அனுமதி பெற்று அய்யனார் ஆட்டோ ஒர்க்ஸ், தூத்துக்குடி, என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியதற்கும், அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.39648/- னை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு-</u>
அனுமதி வழங்கலாம்.
கோப்பு எண். அ4/0184/ 2020

**தீர்மான எண்–2086, அனுமதிக்கப்பட்டது**

**மன்றப் பொருள்.9**

காயல்பட்டணம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள TN 92 D 0054 எண். கொண்ட வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்ய வேண்டியுள்ளதாக, அந்த வாகன ஓட்டுநர் அறிக்கை வழங்கியுள்ளார். எனவே அவசர அவசியம் கருதி இதனை உடனடியாக சரி செய்ய ஆணையர் முன் அனுமதி பெற்று அய்யனார் ஆட்டோ ஒர்க்ஸ், தூத்துக்குடி, என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியதற்கும், அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.36344/- னை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு-
அனுமதி வழங்கலாம்.
கோப்பு எண். அ4/0186/ 2020/

**தீர்மான எண்—2087, அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்.10**

காயல்பட்டணம் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டம் **2020 – 21** ன் கீழ் சாலை பணிகள் மேற்க்கொள்வதற்கு ஒப்பந்தம் கோருவது தொடர்பாக மதுரைமணி பத்திரிக்கையில் **30.12.2020** அன்று விளம்பரம் செய்த வகைக்கு செலவு தொகையாக ரூ.**21,168/—**னை பொது நிதியில் இருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு—
மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண். 1142/2019/இ1.

**தீர்மான எண்—2088, அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்:11**

காயல்பட்டணம் நகராட்சியில் விதி எண். **15**ன் கீழ் அவசர அவசியம் கருதி டிசம்பர் **2020**ம் மாதத்திற்கு செலவினங்கள் மேற்கொண்டதற்கும், அதற்கான பதிவேடு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு—
மன்றம் பார்வையிட்டு அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்—2089, பார்வையிடப்பட்டது அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்: 12**

காயல்பட்டணம் நகராட்சியில் பொது சுகாதாரத்தில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் 139 பணியாளர்களை நியமனம் செய்து அவர்களின் மூலம் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் செயல்முறைகள் நக.எண்.38162/P3/2014-12 நாள்.22.01.2015 ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி தற்பொழுது நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் 90 பணியாளர்கள் மூலம் திடக்கழிவு மேலாண்மைப்பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.183.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.1882 நாள்.09.08.2019ன்படி மன்ற அனுமதி பெற்று ஒப்பந்த விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு

கடந்த 17.12.2019 முதல் வேலை உத்திரவு வழங்கப்பட்டு திடக்கழிவு மேலாண்மைப்பணிகள் நல்ல முறையில் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.தற்பொழுது இப்பணியின் ஒப்பந்தக்காலம் 16.12.2020 அன்று முடிவடைய உள்ளது.காயல்பட்டணம் நகராட்சிப்பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப்பணிகளை மேற்கொள்ள போதுமான நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் செயல்முறைகள் நக.எண்.38162/P3/2014-12 நாள்.22.01.2015ன்படி ஒப்பந்த அடிப்படையில் தூய்மைப்பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டு தூய்மைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்பட்டது.தற்பொழுது நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களால் வழங்கப்பட்ட அனுமதி கடிதம் டிசம்பர் 2020ல் முடிவடைவதால் அதனை மேலும் நீட்டிப்பு செய்திடவும் குப்பைகளை முதல் நிலை சேகரிப்பு மற்றும் இரண்டாம் நிலை சேகரிப்பு போன்ற பணிகளுக்கு வாகனங்கள் வாங்கப்பட்டு பயன்பாட்டில் இருப்பதாலும் நகராட்சியில் தூய்மை இந்தியா-திடக்கழிவு மேலாண்மைத்திட்டம் 2017-18ல் கட்டப்பட்டுள்ள இரண்டு எண்ணம் நுண்உரக்குடில் (Micro Compost centre) மற்றும் Onsite Compost அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வந்துள்ளதாலும் கூடுதலாக தூய்மைப்பணியாளர்கள் தேவைப்படுவதாலும் நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களால் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட (139 நபர்கள்) பணியாளர்களைவிட கூடுதலாக பணியாளர்களை (191 நபர்கள்) அனுமதிக்கவும் உத்திரவிடக்கேட்டு இவ்வலுவலக கடிதம் நக.எண்.அ4/781/2019 நாள்.14.12.2020ன்படி நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது ஒப்பந்தகாரரால் மேற்கொள்ளப்பட்டுவரும் திடக்கழிவு மேலாண்மைப்பணிகளின் ஒப்பந்தக்காலம் 16.12.2020 உடன் முடிவடைய இருப்பதால் திடக்கழிவு மேலாண்மைப்பணிகளை நல்ல முறையில் செயல்படுத்திடவும் பொதுசுகாதாரம் - திடக்கழிவு மேலாண்மைப்பணிகளின் முக்கியத்துவம் கருதியும் நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் கூடுதல் பணியாளர் அனுமதி கடிதம் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் துவக்கப்படும் வரை தற்பொழுது பணி செய்து வரும் M/s.கே.ஆர்.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்,தென்திருப்பேரை என்ற நிறுவனத்தின் மூலம் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட விலையின் அடிப்படையில் பணி செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1)மன்றம் அனுமதி வழங்கலாம்

2)நகராட்சி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கிகரிக்கலாம்.

நக.எண்.781/2019/அ4

**தீர்மான எண்–2090, அனுமதிக்கப்பட்டது**.

**மன்றப்பொருள்.13**

**15th CFC Tied Grant – (Ist Installment) 2020-2021** - ன் கீழ் காயல்பட்டணம் நகராட்சிக்கு ரூ. 57,73,667/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பணிகளை தேர்வு செய்து சமர்ப்பித்திட தெரிவிக்கப்பட்டதின்படி இந்நகராட்சியில் குடிநீர் திட்டப்பணிகள் தலைப்பில் கீழ்க்கண்டவாறு பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | காயல்பட்டணம் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்றும் நிலையத்திற்கு 5000LPM x 70M Head திறனுள்ள ஒரு எண்ணம் horizontal split casing Centrifugal pump விநியோகம் செய்தல் | 9.00 |

| | | |
|---|---|---|
| 2 | காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட தீவுத்தெருவில் 2.00இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டுதல் | 29.00 |
| 3 | காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட கீழலட்சுமிபுரம், இரத்தினாபுரி மற்றும் ஓடக்கரை ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தெக்கத்தொட்டியினை சுற்றி பாதுகாப்பு சுவர் கட்டுதல் | 9.90 |
| 4 | காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட கற்புடையார்பள்ளி வட்டம், உச்சிமகாளியம்மன்கோவில் தெரு மற்றும் கோமான்புதூர் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தெக்கத்தொட்டியினை சுற்றி பாதுகாப்பு சுவர் கட்டுதல் | 9.90 |
| | மொத்தம் | 57.80 |

மேற்கண்டவாறு நிதி ஒதுக்கீட்டில் பணிகளை செய்திடவும் நிதி ஒதுக்கீடு போக கூடுதலாகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்–2091, அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்: 14**

காயல்பட்டணம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு நிதி 2017-18ன் கீழ் கீழ்க்கண்ட விபரப்படியான சாலை மேம்பாட்டுப்பணிகளை ரூ.100.00இலட்சம் மதிப்பில் செய்திட நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் செயல்முறைகள் கடித நக.எண். 21422/2017/E3 நாள். 03.10.2017ன்படி நிர்வாக அனுமதி பெற்றும் தலைமைப்பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆயைணயரகம்,சென்னை அவர்களின் செயல்முறைகள் நக.எண். 24545/2017/DO2 நாள்.30.11.2017ன்படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு திரு.ஏ.அலெக்ஸாண்டர்,பிச்சிவிளை என்பவருக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | சாலையின் அகலம் (மீட்டரில்) | மதிப்பீட்டு தொகை (லட்சத்தில்) |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | காயல்பட்டணம் நகராட்சி அப்பாபள்ளி தெரு சாலை,மொஹதூம் தெரு சாலை,செப்பு குடைஞ்சான் தெரு சாலை மற்றும் சதுக்கைத்தெரு சாலையில் ஜலாலியா ஹால் முதல் வடக்கு பகுதி மற்றும் சொளுக்கார் தெரு சாலைகளில் சிமெண்ட் பேவர் பிளாக்கல் பதித்து மேம்பாடு செய்தல் | 1.425 | 5.00 | 100.00 |

மேற்கண்ட சாலைகளில் அப்பாபள்ளி தெரு சாலை,செப்பு குடைஞ்சான் தெரு சாலை, சதுக்கைத்தெரு சாலையில் ஜலாலியா ஹால் முதல் வடக்கு பகுதி மற்றும் சொளுக்கார் தெரு சாலை ஆகிய நான்கு சாலைகள் தற்பொழுது பேவர் பிளாக்கல் அமைத்து சாலை அமைக்கும் பணிமுடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ஒரு சாலையான மொஹதூம் தெரு சாலையினை பேவர் பிளாக்கல் சாலை அமைக்க எதிர்ப்பு தெரிவித்து தார்சாலையாக மாற்றி அமைக்க வேண்டும் என்று அப்பகுதி பொதுமக்கள் மற்றும் ஜமாத் நிர்வாகிகள் கோரிக்கை வைத்துள்ளதால்,மொஹதூம் தெரு சாலையினை மேற்கண்ட திட்டத்தின் கீழ் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.எனவே அப்பணியினை ரத்து செய்திடவும் செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கான (மதிப்பு ரூ.79,45,635/-) பணி முடிவறிக்கையினை சென்னை,நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் சமர்ப்பித்து ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்–2092, அனுமதிக்கப்பட்டது**

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
காயல்பட்டணம் நகராட்சி